**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 33/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : Tr. Gaja |
| Father/Husband's Name | : Venkatesan |
| Village | : No.37, Palliyagaram Village |
| Taluk | : Salavakkam Viz, |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2024.

Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பள்ளியகரம் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 30.07 ல் இரண்டு வருடத்திற்கு முன்பு எனது அம்மா இந்திராணி எனது வீட்டிலிருந்து எனது தம்பியின் வீட்டிற்கு கூழ் ஊற்றுவதற்காக மகாபலிபுரம் பேருந்தில் ஏறுவதற்கு பதிலாக பூதூர் பேருந்தில் தவறுதலாக ஏறிவிட்டார். அவர் இறங்குவதற்கு முயற்சிக்கும் போது பேருந்தானது எடுக்கப்பட்டு அதனால் அவர் கீழே விழுந்து அந்த பேருந்து ஏறி வயிறு நசுங்கி குடல் வெளியே வந்து இறந்துவிட்டார். அந்த பேருந்தின் எண்.1658 டவுன்பஸ். பேருந்து நிலையத்திலிருந்தவர்கள் எனக்கு தகவல் சொன்னார்கள். ஆம்புலன்சில் அழைத்து செல்லும் போது வழியில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்தானது செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்தில் ஏற்பட்டது. இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். சாட்சியிடம் புகார் ஆவணமானது காட்டப்பட்டது. அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று கூறுகிறார். **(அந்த புகார் அதசாஆ 1 ஆக**

**<u>குறியீடு செய்யப்படுகிறது.)</u>** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

இறந்த எனது அம்மா இந்திராணிக்கு 77 வயது இருக்கும் என்றால் 75, 76 இருக்கும். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் 50 கடைகள் இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தில் ஒரு போலிஸ் பூத் உள்ளது என்றால் சரிதான். அங்கு நிறைய பேருந்துகள் நிற்கும் என்றால் சரிதான். அங்கு கூட்ட நெரிச்சல் இருக்கும் என்றால் சரிதான். பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் சிரமப்பட்டு தான் வரவேண்டும் என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லையென்றால் சரிதான். புகாரில் உள்ள விவரங்களை நான் எழுதவில்லை என்றாலும், கையொப்பம் மட்டும் தான் செய்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தார்கள்.

எனது அம்மாவின் இறப்பிற்கு நஷ்ட ஈடு கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்திராணி எவ்வாறு, எப்படி இறந்தார் என்ற விவரம் யாருக்குமே தெரியாது என்றாலும், தற்போது மோட்டார் வாகன இழப்பீடு பெறுவதற்காக பொய்யான புகார் கொடுத்து அதற்கேற்றார் போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் டவுன் பேருந்தின் எண்.1658 என்று கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 33/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : Thulasi |
| Father/Husband's Name | : Gaja |
| Village | : No.37, Palliyagaram Village |
| Taluk | : Salavakkam Viz |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2024.

Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பள்ளியகரம் கிராமத்தில் வசித்து டெய்லர் வேலை செய்து வருகிறேன். கடந்த 30 ம் தேதி மாதம் நினைவில்லை வருடம் 2023 ல் எனது பாட்டி இந்திராணி என்பவர் எனது சித்தப்பா பாண்டியன் வீட்டிற்கு கூழ் ஊற்றுவதற்காக சென்றார். அவர் மகாலிபுரம் பேருந்து என நினைத்து வேறொரு பேருந்தில் ஏறிவிட்டார். ஏறும் போது அவரது இடுப்பின் மீது பேருந்து ஏறிவிட்டதாக எனக்கு சொன்னார்கள். நாங்கள் பேருந்தை நிறுத்தத்தில் சென்று விசாரித்த போது பஸ் டிரைவர் பின்னால் பார்க்காமல் இடித்து பேருந்து ஏறிவிட்டதாக சொன்னார்கள். அந்த பேருந்து பூதூர் பேருந்து என்று சொன்னார்கள். டிரைவர் பெயர் பூபதி என்று சொன்னார்கள். எனது பாட்டி ஆம்புலன்சில் எடுத்து செல்லும் போது இறந்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். விபத்து சம்மந்தமாக எனது சித்தப்பா, அப்பாவா புகார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

எனது பாட்டிக்கு 77 வயதிருக்கும் என்றால்சரிதான். எனது பாட்டிற்கு ஓரளவிற்கு தான் கண்பார்வை தெரியும் என்றால் இல்லை பஸ் ஏறுவார்கள். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் 50 கடைகள் இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தில் ஒரு போலிஸ் பூத் உள்ளது என்றால் சரிதான். அங்கு நிறைய பேருந்துகள் நிற்கும் என்றால் சரிதான். அங்கு கூட்ட நெரிச்சல் இருக்கும் என்றால் சரிதான். பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் சிரமப்பட்டு தான் வரவேண்டும் என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லையென்றால் சரிதான்.

எனது பாட்டியின் இறப்பிற்கு நஷ்ட ஈடு கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது பாட்டி எவ்வாறு, எப்படி இறந்தார் என்ற விவரம் யாருக்குமே தெரியாது என்றாலும், தற்போது மோட்டார் வாகன இழப்பீடு பெறுவதற்காக பொய்யான புகார் கொடுத்து அதற்கேற்றார் போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 33/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 3 |
| Name | : Prithiviraj |
| Father/Husband's Name | : Elumalai |
| Village | : No.26, Bharathiyar Street |
| Taluk | : Palliyagaram Village |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2024.

Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பள்ளியகரம் கிராமத்தில் வசித்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். கடந்த 30.07.2022 ல் எனது வீட்டின் உரிமையாளரின் தாயார் இந்திராணி என்பவருக்கு செங்கல்பட்டு பேருந்து நிலையத்தில் விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டார். நான் 31.07.2022 அன்று மருத்துவமனைக் குசென்றேன். அங்கு சவகிடங்கில் இந்திராணி இறந்துவிட்டதாக பிரேதம் வைக்கப்பட்டிருந்தது. காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் அளித்தோம். அதற்கு பிறகு இறந்தவரின் பிரேதத்தை பெற்று சென்றோம். புகார் அசா 1 கெஜா கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். இறந்த நபர் எனது வீட்டின் உரிமையாளரின் தாயார் என்பதால் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 33/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 4 |
| Name | : தணிகைவேல் |
| Father/Husband's Name | : சீனிவாசன் |
| Village | : நெ.5, நோனி கம்பெனி தெரு |
| Taluk | : இரட்டைமலை சீனிவாசன்நகர் |
| Caste | : கருணாகரச்சேரி, செங்கல்பட் டு |
| Calling | : |
| Religion | : |
| Age | :25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2024.

Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கருணாகரச்சேரி கிராமத்தில் வசித்து சலூன் கடை நடத்தி வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். 30.07.2022 அன்று விபத்து நடந்தது சம்மந்தமாக விபத்து நடந்த பேருந்து நிலையத்திற்கு சென்றேன். அங்கு ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு கொண்டிருந்தார். நடந்த விவரங்களை சொன்னோம். நாங்கள் சம்பவயிடத்தை பார்த்தோம் என்பதற்கு சாட்சி சொல்லுங்கள் என்று சொன்னார். என்னுடன் ருக்மாங்கதன் என்பவரும் கையொப்பம் செய்தார். **(அந்த பார்வை மகசர் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் சம்பவயிடத்திற்கு செல்வதற்கு முன்பே அந்த இடத்தில் 10, 15 பேர் நின்று கொண்டிருந்தார்களா என்றால் ஆம். அந்த இடத்தை சுற்றி 50 கடைகள்

இருக்குமென்றால் சரிதான். எனது ஊர் சாலவாக்கம் கூட்ரோடு என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு அருகில் நான் வசிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு நான் வசிக்கும் இடத்திலிருந்து வருவதற்கு 20 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். இறந்த நபர் எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் கையொப்பம் இடவில்லையென்றாலும், இந்த கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து இறந்த நபர் எனக்கு தெரிந்தவர் என்பதால் போடப்பட்டது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.